**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 228/2018**

Deposition of Witness for Prosecution

Defence PW : 35

Court I Additional District Court, Tiruvallur.

Name : Tmt. S. Thangamani

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the 25th day of August 2022.

**Date: 25.08.2022, S.C.No. 228/2018 PW : 35 , Tmt. S. Thangamani**

**முதல் விசாரணை...**

நான் தற்போது தஞ்சாவூர் மோட்டார் வாகன விபத்து கோர்உரிமை தீர்பாயத்தில் சிறப்பு சார்பு நீதிபதியாக பணியாற்றி வருகிறேன். நான் திருத்தணியில் குற்றவியல் நீதித்துறை நடுவராக பணிபுரிந்தபோது கடந்த 08.10.2014 அன்று திருவள்ளூர் மாவட்ட தலைமை குற்றவியல் நீதிபதி அவர்களின் உத்தரவினை பெற்று 09.10.2014 அன்று சி.பி.சி.ஐ.டி சென்னை காவல் ஆய்வாளர் அவர்களின் வேண்டு கோள் கடிதத்தை பெற்று அன்றே சாட்சி சௌகத்அலிகான் என்பவருக்கு அழைப்பானையை அனுப்பி 13.10.2014 அன்று காலை 10.00 மணிக்கு புழல் மத்திய சிறைசாலைக்கு வரும்படி கூறினேன். 13.10.2014 அன்று காலை 10.00 மணிக்கு அடையாள அணிவகுப்பு நடத்த ஏற்பாடு செய்யுமாறு புழல் சிறை கண்காணிப்பாளருக்கு ஒரு வேண்டுகோள் கடிதத்தை அனுப்பி வைத்தேன். அதன்படி 13.10.2014 அன்று காலை 10.00 மணியளவில் நான், என் அலுவலக உதவியாளர் மோகன் என்பவருடன் புழல் மத்திய சிறைக்கு சென்றேன். அங்கு சி.பி.சி.ஐ.டி. ஆய்வாளர் சாட்சி சௌகத்அலிகான் என்பவரை என்னிடம் ஆஜர் செய்தார். சாட்சியின் பெயர் மற்றும் விலாசத்தை ஆவணங்களை பார்த்து சரிபார்த்தேன். சாட்சிக்கு தமிழோ, ஆங்கிலமோ தெரியாது என கூறியதால் இந்தியின் மொழிபெயர்ப்பு கூட உதவி சிறை அலுவலர் இஸ்ரவேல் என்பவர் நான் கூறியதை சாட்சியிடம் இந்தியில் கூறினார். பின்னர் சாட்சி சந்தேக எதிரிகளை அடையாளம் காட்டுகிறேன் என்று கூறியதால்

சாட்சியை அழைத்துக்கொண்டு சிறை சாலைக்கு சென்றேன். காவல் ஆய்வாளரை சிறைக்கு வெளியே இருக்க வைத்தேன். சாட்சியையும் என் அலுவலக உதவியாளரையும் சிறை காவலர் ஓய்வு அறையில் இருக்க செய்துவிட்டு சிறை உதவி ஆய்வாளர் திரு. ஏ. இஸ்ரவேல் மற்றும் சிறை தலைமை காவலர் எண் 63, திரு. முத்துபாண்டி ஆகியோருடன் சென்று அடையாள அணிவகுப்பு நடத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடமான சிறை நூலகம் அமைந்துள்ள முதல் தளத்தில் சிறைவாசிகள் படிப்பதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தை பார்வையிட்டேன். அந்த இடமானது வெளிச்சமான பகுதியாக காணப்பட்டது. அங்கு நடக்கும் நிகழ்வுகள் எதுவும் சாட்சிக்கோ, எனது அலுவலக உதவியாளருக்கோ, மற்றும் சிறையில் இருக்கும் வேறு எந்த நபருக்கும் தெரியாது என்பதை உறுதி செய்துகொண்டேன். பின்னர் சாட்சியை அழைத்து நூலகத்திற்கு கீழே இருந்த அறையில் இருக்கும் படி கூறினேன். அறையின் கதவை வெளிப்புறமாக தாழ்பாள் இட்டு காவலர் செல்வகுமார் என்பவரை அறைக்கு வெளியே நிற்கும்படி செய்தேன். சிறை உதவி ஆய்வாளர் இஸ்ரவேல் அவர்களிடம் சந்தேக எதிரிகளை அழைத்து வரும்படி கூறினேன். 6 சந்தேக எதிரிகள் ஆஜர் படுத்தபட்டவுடன் அவர்களது அங்க அடையாளங்களை நீதிமன்ற வாரண்டுடன் ஒப்பிட்டு பார்த்தேன். 6 சந்தேக எதிரிகளிடமும் நான் யார் என்பதையும் எதற்காக வந்துள்ளேன் என்பதையும் விளக்கி கூறினேன். அடையாள அணிவகுப்பு நடத்துவதில் யாருக்கேனும் ஆட்சேபனை உள்ளதா

என்று கேட்டேன். சந்தேக எதிரிகள் அனைவரும் அடையாள அணிவகுப்பை நடத்த எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றும் போலீஸார் எங்களை விசாரணைக்கு எடுத்து செல்லும்போது சாட்சியுடன் நிற்கவைத்தார்கள் என்றும் புகைப்படம் எடுத்துக்கொண்டார்கள் என்று தெரிவித்தனர். எதிரிகளும் சாட்சியும் பார்காமல் இருக்கும்படி சந்தேக எதிரிகளை வேறு அறையில் வைக்க கூறினேன். அடையாள அணிவகுப்பு முடியும் வரையில் அந்த இடத்திற்கு யாரும் வரக்கூடாது என்றும் அந்த இடத்திற்கு யாரும் வராமல் பார்த்துக்கொள்ளும் படி அங்கிருந்த சிறை காவலரிடம் தெரிவித்தேன். எனக்கு உதவிக்கு சிறை உதவி ஆய்வாளர் இஸ்ரவேல் அவர்களை அடையாள அணிவகுப்பு முடியும் வரை உடன் இருக்குமாறு கூறினேன். சிறை உதவி ஆய்வாளரிடம் ஒவ்வொரு எதிரியையும் அழைத்து அவர்களது உருவ அமைப்பிற்கு ஒத்த பல நபர்களை அழைத்துவரும்படி கூறினேன். ஒவ்வொரு எதிரிக்கும் அவர்களது உருவ அமைப்பிற்கு ஒத்த அமைப்புக்கு ஒத்தவாறு 10 நபர்களை தேர்வுசெய்தேன். மற்றவர்களை திரும்ப அனுப்பிவிட்டேன். அதன்பிறகு சந்தேக எதிரிகளை தனி அறையில் இருக்க செய்துவிட்டு ஒவ்வொரு சந்தேக எதிரியாக அழைத்து அவரது உருவ அமைப்புடன் ஒத்த நபர்களோடு நிற்க செய்து அடையாள அணிவகுப்பு நடத்தினேன். எதிரிகள் அனைவரிடமும் அவர்கள் விரும்பிய வரிசையில் விரும்பிய இடத்தில் நின்று கொள்ளலாம் என்றும் விருப்பப்பட்டால் ஒவ்வொரு சுற்றிற்கும் உடைகளை மாற்றிக்கொள்ளலாம் என்றும், தலைமுடியை

வேறு மாதிரி அலங்கரித்துக்கொள்ளலாம் என்றும் விருப்பத்திற்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொண்டு வரிசையில் விரும்பிய இடத்தில் மூன்று சுற்றுகளிலும் நிற்கலாம் என்றும் எதிரிகள் அனைவரிடமும் கூறினேன். நான் கிழக்கு நோக்கி அமர்ந்து கொண்டேன். அடையாள அணிவகுப்பில் நின்றுகொண்டிருந்தவர்கள் என்னை நோக்கி பார்த்தவாறு நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் முதல் சுற்றில் செல்வன் (எ) செல்வம், த/பெ. சிவிலிராஜன் என்ற சந்தேக எதிரி 8வது இடத்தில் நின்றிருந்தார். எனது வலப்பக்கம் இருந்து இடது பக்கமாக வரிசையை குறியீடு செய்தேன். இரண்டாவது சுற்றில் 5வது இடத்திலும், 3வது சுற்றில் 4வது இடத்திலும் நின்றுகொண்டிருந்தார். மூன்று சுற்றிலும் சாட்சி சந்தேக எதிரி செல்வன் (எ) செல்வத்தை தனது ஆள்காட்டி விரலால் தொட்டு அடையாளம் காட்டினார். அவரை அனுப்பி வைத்துவிட்டு 2ம் எதிரியான செல்வகுமார் வயது 40, த/பெ. பிரவியம் என்பவருக்கு மேற்கண்டவாரே அடையாள அணிவகுப்பு நடத்தினேன். செல்வகுமார் என்பவரை அடையாள அணிவகுப்பு நடத்தும்போது அவரது உருவத்தை ஒத்த வேறு 10 சிறைவாசிகளை தேர்ந்தெடுத்து மேற்கூறிய வகையில் நிற்க வைத்தேன். முதல் சுற்றில் அவர் 9வது இடத்திலும், 2வது சுற்றில் 6வது இடத்திலும், 3வது சுற்றில் 1 வது இடத்திலும் நின்று கொண்டிருந்தார். சாட்சியை வரவழைத்து செல்வகுமார் என்பவரை அடையாளம் காட்ட சொன்னபோது 3 முறையும் சாட்சி செல்வகுமார் என்பவரை சரியாக அடையாளம் காட்ட முடியவில்லை. சாட்சி அடையாள

அணிவகுப்பை பார்வையிட்டு எதிரிகள் யாரும் அணிவகுப்பில் இல்லை என்று தெரிவித்தார். சாட்சியையும் எதிரியையும் அனுப்பிவிட்டு 3வது எதிரியான 40 வயதை உடைய சேட்டு, த/பெ. ராஜவேல் என்ற சந்தேக எதிரியை அழைத்து அவரது உருவத்தை ஒத்த வேறு 10 சிறைவாசிகளை தேர்ந்தெடுத்து மேற்கூறிய வகையில் வரிசையில் நிற்க வைத்தேன். அந்த சேட்டு என்பவர் முதல் சுற்றில் 5வது இடத்திலும், 2வது சுற்றில் 8வது இடத்திலும்,, 3வது சுற்றில் முதல் இடத்திலும் நின்றார். சாட்சியை வரவழைத்து சேட்டு என்பவரை அடையாளம் காட்ட சொன்னபோது 3 முறையும் சாட்சி சேட்டு என்பவரை சரியாக அடையாளம் காட்ட முடியவில்லை. எதிரிகள் யாரும் அடையாள அணிவகுப்பில் இல்லை என்று தெரிவித்தார். சாட்சியை அனுப்பிவிட்டு 34 வயதை உடைய லோகநாதன், த/பெ. ஜெயவேல் என்ற சந்தேக எதிரியை மேற்கூறிய வகையில் அடையாள அணிவகுப்பு நடத்த அவரது உருவத்தை ஒத்த வேறு 10 சிறைவாதிகளை தேர்ந்தெடுத்து வரிசையில் நிற்க வைத்தேன். லோகநாதன் முதல் சுற்றில் 5வது இடத்திலும், 2வது சுற்றில் 7வது இடத்திலும், 3வது சுற்றில் 4வது இடத்திலும் அவர் விருப்பப்படி நின்றுகொண்டார். சாட்சியை வரவழைத்து லோகநாதன் என்பவரை அடையாளம் காட்ட சொன்னபோது 3 முறையும் சாட்சி லோகநாதன் என்பவரை சரியாக அடையாளம் காட்ட முடியவில்லை. எதிரிகள் யாரும் அடையாள அணிவகுப்பில் இல்லை என்று தெரிவித்தார். 7ம் எதிரியான 23 வயதுடைய லட்சுமணன் த/பெ. கிருஷ்ணன் என்ற சந்தேக எதிரிக்கு

அடையாள அணிவகுப்பு நடத்த மேற்கூறிய வகையில் ஏற்பாடு செய்து அவரது உருவத்தை ஒத்த வேறு 10 சிறைவாசிகளை மேற்கூறிய வாரே நிற்க செய்தேன். அவர் முதல் சுற்றில் 4வது இடத்திலும், 2வது சுற்றில் 7வது இடத்திலும், 3வது சுற்றில் 2வது இடத்திலும் நின்றுகொண்டார். ஒவ்வொரு சுற்றிலும் சாட்சி பார்வையிடடு சந்தேக எதிரி லட்சுமணனை சரியாக தொட்டு அடையாளம் காட்டினார். 12வது எதிரியான ஹையத் பாஷா வயது 26 த/பெ. சாலியா என்ற சந்தேக எதிரியை அடையாள அணிவகுப்பு நடத்துவதற்கு மேற்கூறியவாறு ஏற்பாடு செய்தேன். அவரது உருவத்தை ஒத்த வேறு 10 சிறைவாசிகளை தேர்ந்தெடுத்து மேற்கூறியவாறு வரிசையாக நிற்கவைத்தேன். அவர் முதல் சுற்றில் 7வது இடத்திலும், 2வது சுற்றில் 4வது இடத்திலும், 3வது சுற்றில் 11வது இடத்திலும் நின்று கொண்டார். சாட்சியை வரவழைத்து சந்தேக எதிரியை அடையாளம் காட்டசொன்னபோது அவர் 3 சுற்றிகளிலும் எதிரி ஹையத் பாஷா என்பவரை சரியாக தொட்டு அடையாளம் காட்டினார். சாட்சி சௌகத் அலியிடம் த/பெ. பாருக்கான், சந்தேக எதிரிகள் 6 நபர்களில் சந்தேக எதிரிகள் 1, 7, 12 எதிரிகளான செல்வம், லட்சுமணன், ஹையத் பாஷா ஆகியோர்களை மட்டும் 3 சுற்றுகளிலும் தனது ஆட்காட்டி விரலால் தொட்டு அடையாளம் காட்டினார். சந்தேக எதிரிகளான செல்வகுமார், சேட்டு, லோகநாதன் ஆகியோர்களை 3 சுற்றிகளிலும் சாட்சியால் அடையாளம் காட்ட முடியவில்லை. மேற்கூறிய 3 பேர் யாரும் அணிவகுப்பில் நிற்கவில்லை என சாட்சி கூறினார்.

அடையாள அணிவகுப்பு முடியும் வரையில் சிறை உதவி ஆய்வாளர் இஸ்ரவேல் அவர்கள் சாட்சிக்கு நான் குறிப்பிடுவதை இந்தியில் விளக்கி கூறிவந்தார். சாட்சிக்கு சந்தேக எதிரிகள் 2, 3, 4 நபர்களை அடையாளம் காட்டுவதற்கு சிறிது நேரம் யோசனை செய்து ஞாபகத்திற்கு கொண்டுவர அவர் விரும்பும் அளவுக்கு அவருக்கு காலஅவகாசம் கொடுத்தேன். அவர் கவனித்துபார்த்தும் 2, 3, 4 சந்தேக எதிரிகளை அடையாளம் காட்டவில்லை. நடத்தப்பட்ட அணிவகுப்பில் 2, 3, 4 எதிரிகள் இல்லை என தெரிவித்தார். அடையாள அணிவகுப்பில் கலந்து கொண்ட மற்ற விசாரணை கைதிகளை முதன்மை காவலரிடம் ஒப்படைத்தேன். பின்னார் அடையாள அணிவகுப்பு நடத்தியது குறித்து ஏதேனும் கூறவேண்டுமா என்று கேட்டேன் அவர்கள் கூறியதை என்னுடைய அறிக்கையில் பதிவு செய்தேன். பின்னார் சந்தேக எதிரிகள் 6 பேரையும் சிறை உதவி ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். சாட்சியை சிறைக்கு வெளியே இருந்த சி.பி.சி.ஐ.டி காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். அடையாள அணிவகுப்பு நடவடிக்கை காலை 10.00 மணிக்கு ஆரம்பித்து மாலை 3.00 மணிக்கு முடித்தேன். அதன்பின்னர் நான் அடையாள அணிவகுப்பு அறிக்கையை தயார் செய்தேன். அந்த அறிக்கை அ.த.சா.ஆ.51 ஆகும். அடையாள அணிவகுப்பின் ஒவ்வொரு சுற்றிலும் சிறைவாசிகளை வெவ்வேறு இடத்தில் நிற்க வைத்தேன்.

**<u>1 மற்றும் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை....</u>**

அடையாள அணிவகுப்பு செயல் முறையை ஆரம்பிப்பதற்கு முன்னர் வழக்கின் வரலாற்று சுருக்கத்தை பாத்த்தேன். தலைமை குற்றவியல் நடுவர் அனுப்பிய ஆவணங்களை நான் பார்வையிட்டேன். சந்தேக எதிரிகளை எப்போது கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பினார்கள் என்று எனக்கு தெரியாது. எதிரிகள் கைது செய்யப்பட்டு எத்தனை நாட்களுக்கு பின்னர் நான் அடையாள அணிவகுப்பு நடத்தினேன் என்று கேட்டால் அவர்கள் கைது செய்யப்பட்ட தேதி எனக்கு தெரியாது. தலைமை குற்றவியல் நடுவர் உத்தரவு படி அடையாள அணிவகுப்பு நடத்தினேன். அடையாள அணிவகுப்பு எதிரிகள் கைது செய்யப்பட்டவுடன் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்றும் எதிரிகள் கைது செய்யப்பட்டு எத்தனை நாட்கள் கழித்து நான் அடையாள அணிவகுப்பு நடத்தினேன் என்று உறுதிசெய்தேனா என்று கேட்டால் எனக்கு கொடுக்கப்பட்ட ஆவணத்தில் எதிரிகள் எப்போது கைது செய்யப்பட்டார்கள் என்று இல்லை. எதிரிகளுடன் சாட்சியை நிற்கவைத்து போட்டோ எடுத்துக் கொண்டதாக எதிரிகள் சொன்ன விவரத்தை சாட்சியிடம் நான் கேட்டு உறுதி செய்யவில்லை. சாட்சியை காவல் ஆய்வாளர் தான் அழைத்து வந்தார். சாட்சியை அடையாள அணிவகுப்பு நடத்த நிற்பந்தித்தார்களா என்றும் எதிரிகளில் போட்டோவை காட்டினார்களா என்றும் எதிரிகளின் அடையாளங்களை தெரிவித்தார்களா என்றும் சாட்சியை விசாரித்து எனது அறிக்கையில் பதிவு செய்தேனா என்று கேட்டால் சாட்சியை விசாரித்தேன் ஆனால்

பதிவு செய்யவில்லை. எதிரிகளின் பெயர் புகைப்படம், ஊடகங்களில் வெளிவந்ததா என்றும் அதை சாட்சி தெரிந்துகொண்டாரா என்பதையும் நான் சாட்சிகளை விசாரித்து அறிக்கையில் பதிவு செய்யவில்லை. சாட்சி அடையாளம் காட்டிய எதிரிகளை தொட்டு அடையாளம் காட்டும்போது அவர்களின் பெயர்களை சாட்சி கூறினாரா என்று கேட்டால் நான் எதிரிகளின் பெயரை சொல்லி அடையாளம் காட்ட சொன்னபோது சாட்சி அதன் பேரில் அடையாளம் காட்டினார். சாட்சி மறுபடியும் எதிரிகளின் பெயர்களை சொல்லவில்லை. நான் சொல்லும் விவரம் என் அறிக்கையில் இல்லை. எதிரியை அடையாளம் காட்டும்படி கூறினேன். அடையாள அணிவகுப்புக்கான வழிமுறைகளை நான் சரியாக பின்பற்றவில்லை என்றால் சரியல்ல. ஆகவே என்னுடைய அறிக்கை நிலைக்கதக்கதில்லை என்றால் சரியல்ல.

எதிரிகள் 3, 4, 7, 12 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். மேற்கூறிய குறுக்கு விசாரணை 3, 4, 7, 12 எதிரிகளால் அடாப் செய்யப்படுகிறது என்று தெரிவித்தார்.

எதிரிகள் 11, 13 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். மேற்கூறிய குறுக்கு விசாரணை 11, 13 எதிரிகளால் அடாப் செய்யப்படுகிறது என்று தெரிவித்தார்.

எதிரிகள் 6, 9, 10 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். மேற்கூறிய குறுக்கு விசாரணை 6, 9, 10 எதிரிகளால் அடாப் செய்யப்படுகிறது என்று தெரிவித்தார்.

மறு விசாரணை இல்லை.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.